# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:158** **தேதி:-22.07.2014**

## மத்திய செயலக முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

புது டெல்லியில் உள்ள நமது கே.ஜி. போஸ் பவனில், 20.07.2014 அன்று நமது BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயலக கூட்டம் அகில இந்திய தலைவர் தோழர் VAN.நம்பூதிரி தலைமையில் நடைபெற்றது. தோழர் VAN நம்பூதிரி நமது சங்க கொடியினை ஏற்றிய பின் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின் கூட்டம் துவங்கியது. தோழர் VAN.நம்பூதிரி தலைமையுரை ஆற்றிய பின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு விவாதக் குறிப்பினை அறிமுகம் செய்து உரையாற்றினார். அவர் தனது உரையில் மாறியுள்ள சூழ்நிலையில் நமது மத்திய செயலக கூட்டம் நடைபெறுவதையும், நரேந்திர மோடி அரசாங்கம் கடைபிடித்து வரும் ஊழியர் விரோத, மக்கள் விரோத கொள்கைகளை பற்றியும், ஊழியர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதில் JAC எடுத்து வரும் முயற்சிகளையும் விரிவாக எடுத்துரைத்தார். பங்கேற்ற 19 அகில இந்திய சங்க நிர்வாகிகளின் விவாதங்களுக்கு பின்பு, ஊழியர்களின் பிரச்சனைகள், BSNL-ன் புத்தாக்கம் மற்றும் அமைப்பை பலப்படுத்துவது உள்ளிட்டவைகளின் மீது கீழ்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

1) **BSNL-MTNL இணைப்பு:-** MTNL-ன் பங்கு விற்பனை பிரச்சனை, அதன் கடுமையான கடன் சுமை மற்றும் இணைப்பின் காரணமாக ஏற்பட உள்ள ஊழியர்கள் பிரச்சனைகளின் ஒரு தீர்வு காணப்படாமல் BSNL-MTNL இணைப்பு என்பது நடைபெறக் கூடாது என முடிவெடுக்கப்பட்டது.

2) **JAC போராட்டங்கள்:-** JAC-யின் போராட்டங்களுக்கு மாநில மாவட்ட சங்கங்கள் வலுவாக ஊழியர்களை திரட்ட வேண்டும் என கேட்டுக் கொண்ட மத்திய செயலகம் வலுவான JAC-யின் போராட்டங்களின் மூலம் தான் ஊழியர்களின் நியாயமான நீண்ட நாட்களாக தீர்க்கப்படாத பிரச்சனைகளில் தீர்வு காண முடியும் என வலியுறுத்தி கூறியுள்ளது. அனைத்து மாநில மாவட்டங்களிலும், நமது மாநில / மாவட்ட செயலர்கள் JAC-யினை உருவாக்கிட வேண்டும். மேலும் JAC-யின் அறைகூவலான 07.08.2014 அன்று நடைபெற உள்ள அட்டை அணிந்து ஆர்ப்பாட்டம் எனும் இயக்கத்தை வலுவாக நடத்த வேண்டும் எனவும் நமது மத்திய செயலக கூட்டம் கேட்டுக் கொண்டது.

3) **நவீன தாராளமய கொள்கைகள், மத நல்லிணக்கம், 10 அம்ச கோரிக்கைகளின் மீதான கருத்தரங்கங்கள்:-** ஒரு சில மாநிலங்கள் தவிர அனைத்து மாநிலங்களிலும் இந்த கருத்தரங்கம் நடைபெற்றதை இந்தக் கூட்டம் பாராட்டியது. அந்த ஒரு சில மாநிலங்களிலும், இந்தக் கருத்தரங்கம் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அதே போல இந்த கருத்தரங்கங்களை மாவட்ட மட்டங்களிலும் நடத்த வேண்டும் என முடிவெடுத்த மத்திய செயலகம், இதற்கான பணிகளை நமது மாநில/ மாவட்ட சங்கங்கள் இந்த பணியினை சிறப்பாக நடத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது.

4) **கருவிகளும் பொருட்களும் இல்லாதது**:- ராஜ்கோட் மத்திய செயற்குழு இந்த பிரச்சனையை அக்கறையுடன் எடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. பல்வேறு பொருட்களும் கருவிகளும் போதாமையை மாவட்ட மட்டங்களில் இருந்து அந்தந்த மாநில சங்கங்கள் கேட்டு பெற வேண்டும் என்பதே அந்த முடிவு. மாநில அளவில் அதனை ஒருங்கிணைத்து மாநில தலைமை பொது மேலாளர்களிடம் அளித்து, மாநில நிர்வாகம் அந்த பொருட்களை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சொல்ல வேண்டும். கார்ப்பரேட் அலுவலகத்தில் இந்த பிரச்சனையை எடுக்க அந்த அறிக்கையின் நகலை மத்திய சங்கத்திற்கு அனுப்ப வேண்டும். ஆனால் எந்த ஒரு மாநில சங்கமும் இதனை அனுப்பவில்லை. சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கு அத்யாவசியமான இந்த முடிவை அனைத்து மாநில சங்கங்களும் உடனடியாக அமுல் படுத்த வேண்டும் என மத்திய செயலகம் கேட்டுக் கொள்கிறது.

5) **அ) BSNL தற்காலிக மற்றும் ஒப்பந்த ஊழியர் சம்மேளன கிளைகளை உருவாக்குவது**:- BSNLCCW-ன் மாநில சங்கங்கள் உருவாக்கப்படாத அனைத்து மாநிலங்களிலும் BSNL தற்காலிக மற்றும் ஒப்பந்த ஊழியர் சம்மேளன கிளைகளை உருவாக்குவது என்பது ராஜ்கோட் மத்திய செயற்குழுவின் முடிவு. இதற்கான பிரத்யோக BSNL ஊழியர் சங்க மாநில செயற்குழுக்களை நடத்தி இந்த மாநில சங்கங்களை உருவாக்க வேண்டும் என்பதும் ராஜ்கோட் மத்திய செயற்குழுவின் முடிவு. அந்த முடிவினை இந்த மத்திய செயலகம் மீண்டும் வலியுறுத்துவதுடன், இந்த முடிவினை மேலும் காலதாமதமின்றி அமுலாக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறது.

ஆ) BSNL தற்காலிக மற்றும் ஒப்பந்த ஊழியர் சம்மேளனம் விடுத்துள்ள போராட்ட அறைகூவல்களில் நமது BSNL ஊழியர் சங்கமும் இணைந்து கொள்வது என்பதுவும் ராஜ்கோட் மத்திய செயற்குழுவின் முடிவு. அனைத்து மாநில/மாவட்ட சங்கங்களும் இந்த போராட்டங்களில் சக்தியாக கலந்துக் கொண்டு வெற்றிகரமாக்க வேண்டும் என இந்த மத்திய செயலக கூட்டம் வலியுறுத்துகிறது.

6) **100 ரூபாய் நன்கொடை**:- மத்திய சங்கத்தின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக அனைத்து உறுப்பினர்களிடம் இருந்து தலா 100 ரூபாய் நன்கொடை வசூலித்து அனுப்ப வேண்டும் என்கிற லூதியானாவில் நடைபெற்ற 6ஆவது அகில இந்திய மாநாட்டின் முடிவினை பல மாநிலங்கள் அமுலாக்கவில்லை. அந்த முடிவினை அமுலாக்கிய மாநிலங்களும் அதனை முழுமையாக செய்ய வில்லை. எனவே அனைத்து மாநில சங்கங்களும் இந்த நன்கொடை வசூலிப்பை முழுமையாக செய்து முடித்து மத்திய சங்கத்திற்கு அனுப்ப வேண்டும் என இந்த மத்திய செயலகம் கேட்டுக் கொள்கிறது.

7) **கொல்கொத்தாவில் 7ஆவது அகில இந்திய மாநாடு நடைபெறுகிறது**:- 2014 நவம்பர் 6 முதல் 9 வரை கொல்கொத்தாவில் நடைபெறவுள்ள 7ஆவது அகில இந்திய மாநாட்டில் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையிலான சார்பாளர்களும் பார்வையாளர்களும் மட்டுமே கலந்துக் கொள்ள வேண்டும் என ராஜ்கோட் மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது. இந்த முடிவினை கறாராக அமுல்படுத்த வேண்டும் என இந்த மத்திய செயலக கூட்டமும் வலியுறுத்துகிறது. ஒதுக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் எந்த பார்வையாளர்களும் அகில இந்திய மாநாட்டிற்கு வரக்கூடாது. மேலும் அகில இந்திய

மாநாட்டு மலர் ஒன்று வெளியிட வரவேற்புக் குழு திட்டமிட்டுள்ளது. மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றிட அனைத்து மாநில சங்கங்களும் விளம்பரங்களை பெற்றுத் தந்து வரவேற்புக் குழுவிற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

8) **கே.ஜி.போஸ் நினைவு மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பாக டெல்லியில் நடைபெற்ற தொழிற்சங்க வகுப்பு**:- கே.ஜி.போஸ் நினைவு மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பாக டெல்லியில் 2014 ஏப்ரல் 7 மற்றும் 8 தேதிகளில் தொழிற்சங்க வகுப்பு நடைபெற்றது. இந்த வகுப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக பங்கேற்ற அனைவரும் தெரிவித்தனர். இந்த வகுப்பு அனைத்து மாநிலங்களிலும் நடத்த வேண்டும் என மத்திய செயலகம் முடிவு செய்துள்ளது.

9) **மாநில மாநாடுகள் குறித்த காலத்தில் நடத்தாதது**:- நமது அமைப்பு சட்டத்தின் படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநில மாநாடுகள் நடைபெற வேண்டும். இந்த கால அளவு முடிந்த பின்பும் ஒருசில மாநிலங்க தங்களின் மாநாடுகளை இதுவரை நடத்தவில்லை. எனவே அகில இந்திய மாநாட்டிற்கு முன்பு நடத்தப்பட வேண்டிய அனைத்து மாநில மாநாடுகளையும் கண்டிப்பாக நடத்தி முடிக்க வேண்டும் என இந்த மத்திய செயலகம் முடிவு செய்துள்ளது.

10) **சர்வதேச நடவடிக்கை தினம்**:- 2014 அக்டோபர் 3ஆம் தேதி சர்வதேச நடவடிக்கை தினம் கடைபிடிக்க வேண்டும் என உலக தொழிற்சங்கங்களின் சம்மேளனம் முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு கடைபிடிக்க உள்ள சர்வதேச நடவடிக்கை தினத்தின் முக்கிய கோஷம் 'வேலையின்மை' என்பதே. இந்த அறைகூவலை BSNL ஊழியர் சங்கம் சக்தியாக நிறைவேற்றுவதை மாநில சங்கங்கள் உத்தரவாதப்படுத்த வேண்டும். இது தொடர்பான மேலும் விவரங்களை மத்திய சங்கம் தரும்.

11) **தோழர் கே.ஜி.போஸ் நினைவு தினம்**:- ஒப்பற்ற தொழிற்சங்க தலைவர் தோழர் கே.ஜி.போஸின் நினைவு தினம் டிசம்பர் 11. BSNL ஊழியர் சங்கம் இந்த தினத்தை தொடர்ந்து கடைபிடித்து வருகிறது. இந்த ஆண்டும் இந்த தினத்தை மாநில/ மாவட்ட சங்கங்கள் மிகச்சிறந்த முறையில் கடைபிடிக்க வேண்டும் என மத்திய செயலகம் கேட்டுக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(S.செல்லப்பா)**
**மாநில செயலாளர்.**